## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 5-9 - மானேய்நோக்கு

**(மூன்றாவது. திருக்குடந்தையிலும் பேறு பெறாமல் திருவல்லவாழ் செல்ல ஒருப்பட்ட நாயகி பக்தி பரவச நிலையாலே அவ்வூர்ப் புறச்சோலையில் விழுந்து, தடுக்கும் தோழியர்க்குத் தன் ஆர்த்தியைக் கூறி, 'அந்தத் திருவல்லவாழ்ப் பிரானை என்று அடைவேன்?' என்று கூறும் பாசுரம்)**

3205 * மானேய் நோக்கு நல்லீர்! * வைகலும் வினையேன் மெலிய *
வானார் வண்கமுகும் * மதுமல்லிகை கமழும் **
தேனார் சோலைகள் சூழ் * திருவல்லவாழ் உறையும்
கோனாரை * அடியேன் அடிகூடுவது என்று கொலோ? 1

3206 என்று கொல்? தோழிமீர்காள்! * எம்மை நீர் நலிந்து என் செய்தீரோ? *
பொன் திகழ் புன்னை மகிழ் * புதுமாதவி மீதணவி **
தென்றல் மணம் கமழும் * திருவல்லவாழ் நகருள்
நின்ற பிரான் * அடிநீறு அடியோம் கொண்டு சூடுவதே 2

3207 சூடுமலர்க் குழலீர்! * துயராட்டியேனை மெலிய *
பாடு நல்வேத ஒலி * பரவைத் திரை போல் முழங்க **
மாடுயர்ந்து ஓமப்புகை கமழும் * தண்திருவல்லவாழ் *
நீடுறைகின்ற பிரான் * கழல் கண்டுங்கொல் நிச்சலுமே? 3

3208 நிச்சலும் தோழிமீர்காள்! * எம்மை நீர் நலிந்து என் செய்தீரோ? *
பச்சிலை நீள்கமுகும் * பலவும் தெங்கும் வாழைகளும் **
மச்சணி மாடங்கள் மீதணவும் * தண்திருவல்லவாழ் *
நச்சரவினணை மேல் * நம்பிரானது நன்னலமே 4

3209 நன்னலத் தோழிமீர்காள்! * நல்ல அந்தணர் வேள்விப் புகை *
மைந்நலம் கொண்டு உயர்விண் மறைக்கும் * தண்திருவல்லவாழ் **
கன்னலங்கட்டி தன்னைக் * கனியை இன்னமுதம் தன்னை *
என்னலங்கொள் சுடரை * என்று கொல் கண்கள் காண்பதுவே? 5

3210 காண்பது எஞ்ஞான்று கொலொ? * வினையேன் கனிவாய் மடவீர்! *
பாண்குரல் வண்டினோடு * பசுந்தென்றலுமாகி எங்கும் **
சேண்சினை ஓங்குமரச் * செழுங்கானல் திருவல்லவாழ் *
மாண்குறள் கோலப் பிரான் * மலர்த்தாமரைப் பாதங்களே 6

3211 பாதங்கள் மேலணி * பூந்தொழக் கூடுங்கொல்? பாவை நல்லீர்! *
ஓத நெடுந்தடத்துள் * உயர்தாமரை செங்கழுநீர் **
மாதர்கள் வாண்முகமும் * கண்ணுமேந்தும் திருவல்லவாழ் *
நாதன் இஞ்ஞாலம் உண்ட * நம்பிரான் தன்னை நாள்தோறுமே 7

3212 நாள்தொறும் வீடின்றியே * தொழக்கூடுங்கொல்? நல்நுதலீர்! *
ஆடுறுதீங்கரும்பும் * விளை செந்நெலுமாகி எங்கும் **
மாடுறு பூந்தடம் சேர் * வயல்சூழ் தண்திருவல்லவாழ் *
நீடுறைகின்ற பிரான் * நிலம் தாவிய நீள்கழலே 8

3213 கழல்வளை பூரிப்ப யாம் கண்டு * கைதொழக் கூடுங்கொலோ? *
குழல் என்ன யாழும் என்னக் * குளிர்சோலையுள் தேனருந்தி **
மழலை வரிவண்டுகள் இசை பாடும் * திருவல்லவாழ் *
சுழலின் மலி சக்கரப் பெருமானது * தொல்லருளே 9

3214 தொல்லருள் நல்வினையால் * சொலக் கூடுங்கொல்? தோழிமீர்காள்! *
தொல்லருள் மண்ணும் விண்ணும் * தொழ நின்ற திருநகரம் **
நல்லருள் ஆயிரவர் * நலனேந்தும் திருவல்லவாழ் *
நல்லருள் நம்பெருமான் * நாராயணன் நாமங்களே 10

3215 * நாமங்கள் ஆயிரம் உடைய * நம்பெருமான் அடிமேல் *
சேமங்கொள் தென்குருகூர்ச் * சடகோபன் தெரிந்துரைத்த **
நாமங்கள் ஆயிரத்துள் * இவை பத்தும் திருவல்லவாழ் *
சேமங்கொள் தென்னகர் மேல் * செப்புவார் சிறந்தார் பிறந்தே 11

**அடிவரவு:** மானேய் என்று சூடு நிச்சலும் நன்னல காண்பது பாத
நாடொறும் கழல் தொல் நாமம் பிறந்த